APRIL/MAY 2024

23USTA25 — சுற்றுலாவியல்

Time : Three hours Maximum : 75 marks

SRI VASAVI INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE LIBRARY

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. சுற்றுலா வகைகள் எவையேனும் இரண்டு சுட்டுக.

2. ஒரு குறிப்பிட்ட இடம் அல்லது நாட்டைப் பற்றி சிறந்த மதிப்பீட்டைப் பயணிகளுக்கு உருவாக்குபவர் யார்?

3. யுவாங்சுவாங்கின் சொந்த நாடு எது?

4. பௌத்த நூல்களைத் தெடி பயணம் புறப்பட்ட சீனப்பயணி யார்?

5. சுற்றுலாவால் ஏற்படும் சமூக விளைவு இரண்டு கூறுக.

6. பறவைகள் கரணாலயம் உள்ள இடம் யாது?

7. தஞ்சை பெரிய கோவில் எத்தனை மாடங்களை உடையது?

8. மாமல்லபுரம் சிற்பங்களின் சிறப்புகளில் எவையேனும் இரண்டு சுட்டுக.

9. சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் எவையேனும் ஒன்று சுட்டுக.

10. முதல் சுற்றுலா விடுதி எங்கு கட்டப்பட்டது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) சுற்றுலா அமைப்பாளர்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சுற்றுலா பயணிகள் குறித்துப் புலப்படுத்துக.

12. (அ) யுவான் சுவாங் பயண அனுபவம் சுட்டுக.

(அல்லது)

(ஆ) பாகியான் பயண அனுபவம் விளக்குக.

13. (அ) சுற்றுலாவின் அறிவு வளர்ச்சி குறித்துப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) சுற்றுலாத்துறை வேலை வாய்ப்புகள் குறித்து விளக்குக.

14. (அ) மாமல்லபுரம் சிற்பங்கள் குறித்துச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) சித்தன்னவாசல் ஓவியங்கள் குறித்து விளக்குக.

15. (அ) சுற்றுலாவின் வளர்ச்சியைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சுற்றுலாத் துறையின் செயல்பாடுகளைச் சுட்டுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி.

16. சுற்றுலா வழிகாட்டிகள் குறித்துக் கட்டுரைக்க.

17. மார்க்கோபோலோவின் பயண அனுபவங்களை ஆய்க.

18. சுற்றுலாவால் ஏற்படும் பொருளாதார வளர்ச்சியினைத் தெளிவுறுத்துக.

19. தஞ்சை பெரிய கோவில் கட்டடக்கலையை விரித்துரைக்க.

20. சுற்றுலாவின் பயன்களைக் கட்டுரைக்க.

———————